ஸ்ரீ தந்வந்தரயே நம:

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை.

விரோதிகிருது
ஆவணி

SEPTEMBER
1971

தொகுதி 33
பகுதி 9

Vol. 33
No. 9

ஆசிரியர் :
வைத்ய வாசஸ்பதி பண்டிட் P. S. ராம சர்மா.

பிரசுரகர்த்தா :
வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

அனுகூலமான சூழ்நிலை	...	161
ஆரோக்கிய கல்பத்துருமம்	...	163
சிகித்ஸையில் கவனிக்க வேண்டியவைகள்	...	165
பிரயோகஸாரம்	...	169

வருஷச் சந்தா
ரூ. 5/-

Annual
Subscription
Rs. 5/-

காரியாலயம் : 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவத்தினுல்

கண்டுபிடிக்கப்பட்ட கை கண்ட பலனளிக்கும்

"சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலேக்கட்டிகளே

எங்கிலேயிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கூளூர். (S. Ry.)

Edited by Vaidya Vachaspati Pandit P. S. Rama Sarma, Published by Dr. T. S Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam, at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2. Printed at Githa Press Tiruchirapalli-2.

ஸ்ரீ தந்வந்த்ரயே நம:

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை.

விரோதிகிருது
ஆவணி

SEPTEMBER
1971

தொகுதி 33
பகுதி 9

Vol. 33
No. 9

ஆசிரியர் :
வைத்ய வாசஸ்பதி பண்டிட் P. S. ராம சர்மா.

பிரசுரகர்த்தா :
வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

அனுகூலமான சூழ்நிலை ...	161
ஆரோக்கிய கல்பத்துருமம் ...	163
சிகித்ஸையில் கவனிக்க வேண்டியவைகள் ...	165
பிரயோகஸாரம் ...	169

வருஷச் சந்தா
ரூ. 5/-

Annual Subscription Rs. 5/-

காரியாலயம் : 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

FOR PURE MUSK, KASHMIR SAFFRON, GOROCHAN & INDIAN CRUDE DRUGS

WRITE TO

M/s. KALIA BROTHERS (Regd)

Wholesale Musk & Indian Drugs Merchants,

JULLUNDUR CITY (PUNJAB)

Gram: KALIA

Phone: Office - 3232
Resi. - 4343

சுத்தமான கஸ்தூரி, காஷ்மீர் குங்குமப்பூ, கோரோசனை மற்றும் மருந்து சரக்குகட்கு

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

கலியா பிரதர்ஸ் [ரிஜிஸ்டர்ட்]

கஸ்தூரி மருந்து சரக்கு மொத்த வியாபாரி,

ஜல்லந்தர் ஸிடி (பஞ்சாப்)

தந்தி: KALIA

போன் : ஆபீஸ் - 3232
வீடு - 4343

தந்தி: "அம்ருதம்" P. B. No. 1382. போன்: 26006

தி ஆர்ய வைத்திய பார்மஸி

(கோயமுத்தூர்) லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18

உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்.

எங்களுடைய கிளைகள்:

1.	23 B, பூஸா ரோடு, புது டில்லி:	போன்;	585687
2.	மொயிதீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1	,,	2984
3.	கௌடியா மடத்தெரு, மதராஸ்-14	,,	85752
4.	வளிஞ்ஞம்பலம், எர்ணாகுளம், கொச்சின்-18	,,	32219
5.	பிள்ளையார் கோயில்ரோடு, கண்ணனூர்-1	,,	92
6.	மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1	,,	195
7.	கடைவீதி, பொன்னானி	,,	41
8.	ரௌண்ட் வெஸ்டு திருச்சூர்-1	,,	378
9	கோர்ட் ரோடு, ஆலத்தூர்	,,	87
10	மெயின் ரோடு, கஞ்சிக்கோடு		
11.	ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18	,,	33758
12	இந்திரா பில்டிங் கள்ளிக்கோட்டை-2	,,	4891
13	229 ராஜவீதி, கோயமுத்தூர்-1	,,	33988
14	T. T. 384 K. டெலிச்சேரி ரோடு, கண்ணனூர்-2		
15	No. 263, 64 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னானி)		

பாக்டரி:
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன்: 2)

நர்ஸிங்ஹோம்:
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன்: 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க:—

ஆர்ய வைத்தியன் P. V. ராமவாரியர்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

வாரியர்

க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களேயும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினுல் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளேயும் நிச்சயமாகக் குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலேவலி முதலிய கோளாறுகளேயும் குணப் படுத்தும் :

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும் விருதாப்பியத்தினுல் ஏற் படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலே 25 ML ரூ. 7-00; 12 ML. ரூ 3–75

ஆரிய வைத்தியர் கே. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனுபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE : 5441 வீடு போன் : 6074

[1936-ல் நிறுவப்பட்டது.]

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.,

MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்
N. வைத்யநாதன், R. M. P.

FOR
ALL YOUR REQUIREMENTS
OF
MUSK, SAFFRON, KANMADAM
(SHILAJIT) AND INDIAN HERBS ETC.

Please Contact :

PURI BROTHERS (REGD.)

MUSK MERCHANTS
JULLUNDUR-1

Grams : "VENKATESH" Phone : 3923

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

தொகுதி 33	விரோதிகிருது ஆவணி	பகுதி 9
Vol. 33	1971 செப்டம்பர்	No. 9

॥ श्री धन्वन्तरये नमः ॥

उदेतु हृदयाकाशे गुरुवर्यकलानिधिः ।
यदीयचन्द्रिका वैद्यसंशयध्वान्तनाशिनी ॥

நம: சிவகுமாராய.

அனுகூலமான சூழ்நிலை

கடலுக்கு "ரத்னாகரம்" என்றொரு பெயர் உண்டு. பலவித மான ரத்னங்களை பல இடங்களில் ஏராளமாக உள்ளடக்கி வைத் திருப்பதால்தான் அந்தப்பெயர் ஏற்பட்டது. எங்கேயாவது யாராவது மூழ்கிப் பார்த்தால் உடனே முத்துக்கள் கிடைக்காது. தகுந்த காலத்தில் உரித்தான தூத்துக்குடி போன்ற இடங்களில் அநுபவமுள்ளவர்கள் முத்துக்குளித்தால் முத்துக்களை எடுக்க லாம். அதே போன்றுதான் இந்திய வைத்தியத்திற்கு "ஆயுர் வேதம்" என்ற பெயரும் அமைந்துள்ளது. நன்றாகக்கற்று ஆராய்ச்சியுடன் அனுபவம் பெற்றால் இவ்வைத்தியத்தின் மூலம் நீண்ட ஆயுளை நாம் அடையலாம். இவ்வுண்மையை அறிந்த நமது ராஷ்டிரபதி அவர்கள் டாக்டர்களை ஆயுர்வேதத்தில் ஆராய்ச்சி செய்து பார்க்கச் சொல்கிறார்கள். அப்படி ஆராய்ந் தால் நல்ல பலன் கிட்டும் எனவும் கூறுகிறார்கள். ஏனெனில் ராஷ்டிரபதி அவர்கள் கேரளத்தில் பல தடவைகளில் ஆயுர்வேத சிகித்ஸை பெற்று உடலைப் புதுப்பித்துக் கொண்டு நீண்ட ஆயுளை

யும் ஆரோக்யத்தையும் பெற்றுள்ளார்கள். ஆகையால் தான் அனுபவபூர்வமான கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள். தேசத் தலைவர்கள் இம்மாதிரியான கருத்துக்களை பகிரங்கமாக வெளியிடுவது இந்திய வைத்தியத்திற்கு ஓர் நல்லகால அறிகுறி எனலாம்.

நிற்க மூன்று கோடி ரூபாய் செலவில் ஆயுர்வேத சர்வகலா சாலையை மலையாள தேசத்தில் நிறுவப்போகின்றனர். நாட்டு மூலிகைகளுக்கும் பஞ்ச கர்மா போன்ற பண்டைய சிகித்ஸை முறைகளுக்கும் இருப்பிடமான கேரள நாட்டில் ஆயுர்வேதம் மிகவும் அபிவிருத்தி அடைய முடியும் என்பதில் சந்தேகமில்லை டில்லி கவர்னரின் மனைவி ஆயுர்வேதத்திலிருந்து கரப்பான், மலட்டுத்தனம் முதலியவற்றிற்கு பயன்தரக்கூடிய மருந்துகளைக் கண்டுபிடித்துள்ளார்கள் என்பதும் அபிவிருத்தியின் அறிகுறி எனக்கொள்ளலாம். நவீன மருத்துவர்களும் இந்திய வைத்ய மூலிகைகளின் பெருமைகளை ஆராய்ந்து ஒப்புக்கொண்டு வருகிறார்கள். இதற்கு நவீன வைத்ய முறையிலும் ஓர் ஆராய்ச்சி பிரிவு ஏற்பட்டுள்ளது சமீபத்தில் காடுகளிலிருந்தும் மலைகளிலிருந்தும் எடுக்கப்பட்ட சுமார் முப்பது வகை மூலிகைகள் புற்றுநோய் தடுப்புச்சக்தி பெற்றவை என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவ்வாராய்ச்சி அமெரிக்க பொது சுகாதாரத்துறையின் கூட்டுறவுடன் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இம்மூலிகைகளில் அடங்கியுள்ள மருத்துவ மூலகங்கள் லக்னோவிலுள்ள மத்ய மூலிகை ஆராய்ச்சி நிலையத்தில் தயாரிக்கப்பட்டு அமெரிக்க நாட்டில் மேரிலாண்டு மாநிலத்தில் இருக்கும் பெதஸ்டா தேசீய புற்றுநோய் ஆராய்ச்சிக் கழகத்திற்கு அனுப்பப்படுகின்றன. அங்கு இம்மருந்து மூலகங்களின் புற்றுநோய் நிவாரண சக்தியை முதலில் மிருகங்களிடம் பரிசோதனை செய்து பின் மனிதர்களுக்குப் பயன்படுமா என்று பரிசோதனை செய்து பார்க்கிறார்கள். இவ்வாறான மருந்து சக்தியை தம்முள் கொண்டுள்ள மூலிகைகளை குஜராத்தின் நாட்டு பிரதேசங்களில் தேடும் ஆராய்ச்சிப் பணியில் பரோடா பல்கலைக்கழகம் ஐந்தாண்டாக ஈடுபட்டு இருக்கிறது இதுவும் அமெரிக்க விவசாய இலாகாவின் விவசாய ஆராய்ச்சிப் பிரிவினரது கூட்டுறவில் இணைந்த முயற்சியேயாகும். என்றாலும் இந்திய மூலிகைகளின் பெருமை விளங்கத்தகுந்த ஏற்பாடு. தற்போது ஆயுர்வேதத்தில் 50, யூனானியில் 16, சித்த வைத்யத்தில் 6, ஆக 72 மெம்பர்கள் கொண்ட இந்திய வைத்ய கௌன்ஸில் அமைந்துள்ளதும் வருங்காலத்திற்கு அனுகூலமானது. தமிழ் நாட்டைப் பொருத்தவரை சீரான ஏற்பாடுகள் விரைவில் செய்தால்தான் இப்படிப்பில் பொது ஜனங்களுக்கு ஊக்கம் ஏற்படும் என்பதை வற்புறுத்துகிறோம்.

ஆரோக்கிய கல்பத்துருமம்

மஹோதர சிகித்ஸை

கீழே தடைப்பட்ட வாயு மலம் வெளிப்படுதலை அடைத்து பல உபத்ரவங்களுடன் சிசுவிற்கு உதரத்தை உண்டாக்குகின்றது. மஹோதரம் என்றது குறிப்பிடப்படுவதில்லை எனினும் அதன் சிகித்ஸை பொருந்துவதால் அப்பெயர்.

பத்யாதி கஷாயம் : கடுக்காய், மூக்கரட்டை வேர், புங்கின் துளிர், இவைகளின் கஷாயம் இந்துப்பும் வெல்லமும் சேர்த்துக் கொடுக்கலாம்.

புனர்னவாதி கஷாயம் : மூக்கரட்டை வேர், கடுக்காய், வெண் செவதை வேர் இவை மூன்றும் ஒரு பங்கு, கண்டதிப்பிலி, திப்பிலி, செவ்வியம், கொடிவேலி வேர் பட்டை, சுக்கு இவ்வைந்தும் சேர்த்து ஒரு பங்கு இவைகளைக் கஷாயம் வைத்து சர்க்கரை சேர்த்துக் கொடுக்கலாம்.

திரிபலாதி கஷாயம் : திரிபலை, விரளி மஞ்சள் வெண் செவதை, சங்கங்குப்பி வேர், சுக்கு, ஓமம் இவைகளின் கஷாயத்தை சர்க்கரை சேர்த்து கொடுக்கவும்.

ஆர்த்ரகாதி கிருதம்: இஞ்சி, சரக்கொன்னைத் துளிர், எருக்கிலை, கள்ளி இலை, பிரம்மி இலை இவைகளை இடித்துப் பிழிந்த சாறும், சுக்கு, திப்பிலி, மிளகு, ஏலம், லவங்கப் பட்டை, பச்சிலை, கோரைக் கிழங்கு, நெல்லிமுள்ளி, வெண்செவதை வேர், வாய் விளங்கம் இவைகளை அரைத்துக் கல்கமும் சேர்த்துத் தயாரித்த நெய் காலையில் கொடுக்கலாம். அல்லது அன்னத்தோடுகூட சேர்த்துக் கொடுக்கலாம்.

கவாக்ஷியாதி குளிகை : சங்கபுஷ்பியின் வேர், கடுகு ரோஹிணி, கடுக்காய், வெள்ளெருக்கின் வேர், அவுரி, நேர்வாள விதை, நேர்வாள வேரின் மேல் தோல், நெல்லிக்காய், இலந்தை வித்து, திப்பிலி, கண்டந் திப்பிலி, சுக்கு, செவ்வியம். கொடி வேலி வேர் பட்டை, இவை சமனெடை எடுத்து, கோமூத்ரம், திரிபலை கஷாயம், சீந்திற்கொடி கஷாயம், பிரமிச் சாறு, திரிகடு கஷாயம், வெண் செவதை கஷாயம், கும்மட்டிச்

சாறு இவைகள் விட்டரைத்து உளுந்தளவு மாத்திரை உருட்டி, நிழலிலுலர்த்தி, வென்னீருடன் சர்க்கரை சேர்த்துக் கொடுக்க நல்லது.

கும்ப காமலை எனும் உதரத்துடன் காமலையும் சேர்ந்து ஏற்படும் நோயிலும் இதே சிகித்ஸையைச் செய்யலாம்.

பாண்டுவில்

சதாவர்யாதி கஷாயம்: தண்ணீர் விட்டான் கிழங்கு, பால் முதுக்கன் கிழங்கு, முடக்கத்தான், புத்தரிச் சுண்டை வேர், வேப்பம்பட்டை இவைகளைக்கொண்டு கஷாயம் வைத்து நெய் சேர்த்துக் கொடுக்க நல்லது.

குரண்டபத்ராதி கஷாயம்: மணத்தக்காளி அல்லது கருந்தாளி இலை, புங்கின் பட்டை, வல்லாரை, நாமக் கரும்பு வேர், பூசணிக் கொடி இவைகளின் கக்ஷாயத்தை நெய் சேர்த்தும் கொடுக்கலாம்.

படோலாதி கஷாயம்: பேய்ப்புடல், மரமஞ்சள் தோல், புத்தரிச் சுண்டை வேர், வேப்பம்பட்டை இவைகளை கஷாயமிட்டு நெய் சேர்த்துக் கொடுக்கலாம்.

அமிருதாதி கஷாயம்: சீந்திற்கொடி, ஆடாதோடை வேர், அதிமதுரம், புத்தரிச் சுண்டை வேர், ஏலரிசி, வேப்பம்பட்டை இவைகளைக் கொண்டு கஷாயம் வைத்து தேன் சேர்த்துச் சாப்பிடலாம்.

அஜமோதாதி மோர்கடி: ஓமம், மண்டூரம், வல்லாரை, எள்ளு, கருசலாங்கண்ணி இவைகளைக்கொண்டு மோரில் மோர்கடி தயாரிதது்ச் சாப்பிடலாம்,

பிருங்க ராஜாதி சூர்ணம்: கருசலாங்கண்ணி இலை 4 பங்கு, மிளகு 3 பங்கு, கொடிவேலி வேர் பட்டை 2 பங்கு, மண்டூரம் 1 பங்கு இவைகளை நன்கு சூர்ணம் செய்துகொண்டு, ஓமமும் சுக்கும் சேர்த்துக் காய்ச்சிய மோரில் கலக்கிச் சாப்பிட மிகவும் நல்லது.

புனர்னவாதி கஷாயம்: மூக்கரட்டை வேர், சீந்திற்கொடி, வேப்பம்பட்டை, புத்தரிச்சுண்டை வேர் மேல் தோல், கடுக்காய், மரமஞ்சள் தோல், சுக்கு, பேய்ப்புடல் இவைகளைக் கொண்டு

கஷாயம் வைத்து சர்க்கரை கூட்டிக் கொடுக்க—எல்லா அங்கங்களிலும் வீக்கமும், ஜ்வரம், காஸம், சுவாஸம், வயிற்றில் வேதனை இவைகளோடு கூடின பாண்டுவில் மிகவும் நல்ல குணம் கிடைக்கும்.

இந்திராசனிப் பொடி: எள்ளு, திப்பிலி. இலந்தை விதை இவை 1 பங்கு மாக்ஷிகக்கல் 2 பங்கு, இரும்புத்தூள் 3 பங்கு, சுக்கு 4 பங்கு இவைகளைச் சேர்த்துப் பொடித்து ஸம அளவு சர்க்கரை சேர்த்து தேனில் குழப்பிக் கொடுக்க பாண்டு, அர்சஸ், மஹோதரம், பகந்தரம், மண்ணீரல் பெருத்தல். அஷ்டீலை இவை சமிக்கும்.

பத்யாதி குளிகை: கடுக்காய், மூக்கரட்டை வேர், இலந்தை இலை, எள்ளு, ஓமம், சுக்கு, கையாந்தரை, சித்தாமுட்டி வேர், கொடிவேலி வேர்ப்பட்டை, இவை வகைக்கு சமனெடை எடுத்துச் சேர்த்து, இதற்கு சமம் மண்டூரம் சேர்த்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு 7 நாளரைத்து, சிறு பயறளவு மாத்திரை உருட்டிக் கொள்ளவும். மோரில் கரைத்துக் கொடுக்க எல்லாவித பாண்டுவிலும் நல்ல குணம் கிட்டும்.

சிகித்ஸையில் கவனிக்க வேண்டியவைகள்

வைத்யஸ்ரீ V. S பஞ்சநதசர்மா, ஆயுர்வேதசிரோமணி

ஜ்வரம் கண்டு ஐந்து நாட்கள் வரை: அதிக காற்று, பகலில் அதிக நேரம் தூங்குவது, ஸ்னனம், எண்ணெய் தேய்த்துக் குளிப்பது, புணர்ச்சி, கோபம் ஆகியவைகள் கூடாது.

ஜ்வரம் கண்டு இரண்டு நாட்கள் வரை - கன ஆகாரம் கொடுக்காமல் வென்னீர், பார்லிக்கஞ்சி அடிக்கடி கொடுக்கலாம்.

சயனம் பித்தநாசாய - வாதநாசாய மர்த்தனம்
வமனம் கபநாசாய - ஜீவரநாசாய லங்கனம்

என்ற ஆசார்யர்களின் வாக்குப்படி - லங்கனம் மேலானது.

ஜ்வரத்தில் – தண்ணீரைக் கொதிக்க வைத்து சூடாறிய பிறகு சிறுகச்சிறுக அடிக்கடி கொடுக்கலாம்.

நாள்பட்ட ஜ்வரத்தில் – காய்ச்சிய பசும்பால் நிச்சயமாய் ஆகாரமாகக் கொடுக்க வேண்டும். ஸர்வஜ்வராணும் ஜீர்ணுணும் க்ஷீரம் பைஷஜ்யமுத்தமம்.

ஆந்திரிக ஸந்நிபாத ஜ்வரத்தில் – ஜ்வரத்தைக் கண்டிக்கும் மருந்துகள் கொடுப்பதைவிட ஆமவிஷத்தைப் பாசனம் செய்யும் மருந்துகள் கொடுப்பதே நல்லது.

சாதுர்த்திகம் – இரண்டு நாட்கள் காய்ச்சல் அடித்து நடுவில் இரண்டு நாட்கள் காய்ச்சல் இல்லாமல், மறுபடியும் நான்காம் நாள் மாலையோ அல்லது மறுநாள் காலையோ காய்ச்சல் ஆரம்பிப்பதற்கு பெயர். இந்த காய்ச்சல் முற்றும் குணமான பிறகும் நான்கு மாதங்கள் வரை வெல்லம் சேர்ந்த பதார்த்தங்கள் கொடுக்கக்கூடாது. அவ்விதம் சாப்பிட்டால் காய்ச்சல் மறுபடியும் வரக்கூடும்

மஸூரிகா ஜ்வரத்தில் – குடிப்பதற்குக் காய்ச்சிய சூடான வென்னீரைவிட – குளிர்ந்த சூடாறிய தண்ணீரே கொடுக்க வேண்டும்.

ஸந்நிபாத ஜ்வரத்தில் – நா வரட்சி அதிகம் இருந்தால் குளிர்ந்த தண்ணீர் கொடுக்கக்கூடாது. இந்த காய்ச்சலில் வியர்வை அதிகம் வந்தால் அதைக் கட்டுப்படுத்தும் மருந்துகள் கொடுக்க வேண்டும். இல்லாவிடில் உயிருக்கே ஆபத்து உண்டாகிவிடும்.

மயக்கம் வந்தால் – தீக்ஷ்ணமான நஸ்யம் செய்து ஞாபக சக்தியைக் கொண்டுவர வேண்டும். காது உள்புறமும், வெளியிலும் வீக்கம் கண்டால், "உதும்பரஸாரம்" உள்ளும் போட்டு வெளியிலும் தடவி வீக்கத்தை சீக்கிரம் கரைக்க வேண்டும். பொதுவாக முதலில் கபத்தைச் சமனம் செய்து பிறகு வாத பித்த தோஷத்தை கண்டிக்க வேண்டும்.

ஜ்வரம் – எதுவாக இருந்தாலும், விட்ட பிறகு, உடலுக்கு சக்தி வரும்வரை புணர்ச்சி, உடற்பயிற்சி, அதிக தூரம் நடப்பது லகுவில் ஜீர்ணமாகாத பதார்த்தங்கள், வெய்யிலில் அலைவது, அதிக காற்றில் அலைவது கூடாது.

ஆந்திரிக ஸந்நிபாதம் – ப்ளேக் ஸந்நிபாத ஜ்வரங்களிலும், க்ஷயத்திலும் விரேசன மருந்துகள் கொடுக்கக்கூடாது – மலச் சிக்கல் இருந்தால், சரக்கொன்னைப் புளியைக் காய்ச்சிப் பசும் பாலில் போதிய அளவு சேர்த்துக் கொடுக்கலாம்.

அதிஸாரம் – உள்ளவனுக்கு-பால், புளி, காரம் சேர்த்த சாதம் சீக்கிரம் ஜீர்ணமாகாதவை சேர்க்கக்கூடாது புழுங்கல் அரிசி வறுக்காமல் ரவைபோல் உடைத்து வைத்து கொண்டும், ஜவ்வரிசியை வறுத்து உடைத்து வைத்துக்கொண்டும் கஞ்சி போட்டு வெண்ணை எடுத்த மோர் சேர்த்துக் கொடுக்க வேண்டும். தண்ணீரைக் கொதிக்க வைத்து சூடாறிய பிறகு கொடுக்கவும். அதிஸாரம் நின்ற பிறகும் சில நாட்கள்வரை – மோர் சாதம் மட்டும் கொடுக்க வேண்டும். மருந்துகள் கொடுப்பதானால் அளவைக் குறைத்து 3 – 4 மணிக்கு ஒருதடவை கொடுக்க வேண்டும்.

விஷூசிகா (காலரா)வில் – நோயாளிக்கு அடிக்கடி ஒவ்வொரு மிடர் குளிர்ந்த தண்ணீர் (ஐஸ் ஜலம்) குடிக்க கொடுக்க வேண் டும்; இல்லாவிடில் பெருஞ்சீரகம் அர்க்கத்தைக் கொதித்து நன்ருக சூடாறிய தண்ணீரில் கலக்கி அடிக்கடி இடைவிடாமல் ஒரு டேபிள் ஸ்பூன் வீதம் கொடுத்து வரவேண்டும். ஒரே சமயத் தில் அதிகமான அளவு தண்ணீர் கொடுத்தால் இருபங்கு வாந்தி யெடுத்து உடலில் ஜலாம்சம் அற்றுப்போகும். அபின் சேர்ந்த ஔஷதங்கள் கொடுக்கக்கூடாது. வயிற்றுப்போக்கு நின்று வாந்தி நிற்காமல் இருந்தால் நல்லெண்ணெய் 1 டீ ஸ்பூன் வீதம் மூன்று நான்கு தடவை கொடுக்கலாம்,

நாள்பட்ட மலச்சிக்கல் – உள்ளவர்களுக்கு அடிக்கடி விரேசன மருந்து கொடுக்கக்கூடாது. அவசியம் இருந்தால் "கிளிசரின் எனிமா" கொடுத்து குடலுக்குக் கெடுதல் இல்லாமல் மலத்தை வெளிவரச் செய்ய வேண்டும். தினம் இரவு இஸப்கோல் 1 ஸ்பூன் முதல் 2 ஸ்பூன் வரை காய்ச்சிய பசும்பாலுடன் கொடுக்க வேண்டும்.

அர்சஸ் (மூலம்) – உள்ளவனுக்கு காரம், அதிகப்புளி சேர்ந்த ஆகாரங்கள் கொடுக்கக்கூடாது. மலச்சிக்கல் உண்டு பண்ணக் கூடியதும், உஷ்ணத்தை கொடுக்கக்கூடியதுமான ஆகாரங்கள் கொடுக்கக்கூடாது.

அம்லபித்தத்தில் – சாப்பாட்டு நடுவிலும், சாப்பிட்ட உடனும் அதிகம் தண்ணீர் குடிப்பதும், காய்கள் அதிகம் உண்பது, சுடச் சுட ஆகாரம் உட்கொள்வது, காபி, டீ, கோகோ போன்றவைகள்

குடிப்பது கூடாது. இந்த நோயில் எரிச்சல் அதிகம் இருந்தால் வமனம் லகுவிரேசனம் செய்து பிறகு சமனமாக ஔஷதங்கள் கொடுத்தால் நிச்சயமாக குணம் அடையும்.

ரக்தபித்தம் – உள்ளவனுக்கு புகை பிடிப்பது, காபி, டீ போன்ற பித்த வர்த்தகமானவைகள் கூடாது.

உதரம் – எல்லா வகையிலும் மோர், கோமூத்ரம் கொடுப்பது நல்லது.

க்ருமி (நாக்குப்பூச்சி) – ரேரகத்தில் வெல்லம், அதிகம் பால் குடிப்பது கூடாது. ஆனால் நல்லெண்ணெய் நன்மை செய்யும்.

பகந்தரந்தில் – பெருங்காயம், இனிப்பு பதார்த்தங்கள் கூடாது.

ரத்தகுல்மத்தில் – கர்ப்பமா என்ற சந்தேகம் தீர 10 அல்லது 11 மாதங்கள் தாமதித்துப் பிறகு சிகித்ஸை கிரமம் செய்ய வேண்டும். கபப்ரதானமான குல்மத்தில் வமன விதி கெடுதல் செய்யும்.

சூலரோகத்தில் – முதலில் ஸ்வேத சிகித்ஸை செய்து பிறகு முறையே வமனம், லங்கணம், பாசனங்களான மருந்துகள் கொடுக்க வேண்டும். வாதஜ சூலத்தில், விரேசனமும் நிருஹ பஸ்தியும், பித்தஜ சூலையில் மதுரமான (இனிப்பு ரஸம்) ஔஷ தங்களால் தயார் செய்த பசும்பாலும், கபஜசூலையில் கசப்பு, துவர்ப்பு, உவர்ப்பு ரஸம் உள்ள மருந்துகளும் நன்மை செய்யும். (b) பரிணம நிலையில் லங்கணம், வமனம், விரேசனம், தைலம் சேர்த்து பஸ்திகர்மா ஆகியவைகள் நன்மை செய்யும், (c) அன் னத்ரவ சூலையில் பித்தம் முழுவதும் வெளிவரும்வரை வமனமும் கபம் முழுவதும் வெளிவரும்வரை விரேசனமும் பிறகு அம்ல பித்தத்தில் கொடுக்கும் ஔஷதங்களையும் கொடுக்க வேண்டும். '' பித்தாந்தம் வமனம் க்ருத்வா கபாந்தம்ச விரேசனம். அன்னத்ர வேச தத்கார்யம் ஜரத்பித்தே யதீரிதம் ''.

ஆமவிஷத்தால் உண்டாகும் தீவ்ரமான உதரசூலையில் வென்னீரில் சாப்பாட்டு உப்பை கலக்கி குடிக்கச் செய்து வமனம் செய்யச் சொல்லவும். வலியை குறைக்கும் மருந்துகள் கொடுத் தால் கெடுதல்தான் உண்டாகும்.

—தொடரும்

பிரயோகஸாரம்

இரண்டாம் படலம்

கர்ப்பரக்ஷை

1. ஒரு காலத்தில் முருகபெருமானைக் காக்க கிரஹங்கள் சிருஷ்டிக்கப் பெற்றன. 81, 64, 50, 25, 16, 12 10, 7, 5, என்று முறையே ருத்திரன், மாதாக்கள், பார்வதி, விஷ்ணு, இந்திரன், பிரம்மா, திக்தேவதைகள், மஹா நாகங்கள். பித்ருக்கள் இவர்களால்] ஒன்பது கணங்களாக அமைக்கப்பெற்றன. ஆக 270 கிரஹங்கள். இவர்களில் ஆண், பெண் நபும்ஸகம் என்ற பிரிவினை உண்டு.

2. இவர்களுக்கு ஷண்முகன், நடைமுறை கெட்டு கருத்தரிப்பவர்களிடையே நுழைந்து பூஜையைப் பெறுங்கள் என்று வரம் அளித்தார். அதனால் கருத்தரித்தது முதல் மறைந்திருந்து குழந்தையை இவர்கள் பீடிக்கின்றனர்.

3. தமனீ, பீஷணீ, கண்டாலீ, காகோலீ, த்ரிசண்டி, பட்காரி, திரிதண்டி, தாபனீ, முக்தகேசீ, ரோதனீ, என்று பத்து விதப் பூதனைதள் கருத்தரித்த முதல் மாதம் முதல் கர்ப்பத்தை அழிப்பதற்காகச் சுற்றும். அவைகளைத் தடுக்க பலியிடவேண்டும்.

4. கருத்தரித்த முதல் மாதத்தில் வேதனை ஏற்பட்டால் தேக்கம் விதை, பதிமுகம், விலாமிச்சைவேர், அஸாரூன் இவைகளை ஜலத்தில் அரைத்து பாலில் கலக்கிச் சாப்பிட ஹிருதயவலி நின்று கரு சுகமாக வளரும். இரண்டாவது மாதத்தில் தாமரைக் கிழங்கு, அல்லிக்கிழங்கு, கர்க்கட சிருங்கி, ஆம்பல் கிழங்கு இவைகளை அரைத்துச் சாப்பிடலாம். மூன்ருவது மாதத்தில் சிறு நாகப்பூ, குஸும்பைஎள், பதிமுகம், தாமரை இலை இவைகளை அரைத்தும் நான்காவது மாதத்தில் நீலத்தாமரைக் கிழங்கு, தாமரை இலை, கொத்துமல்லி, வாழைக்கிழங்கு இவைகளை அரைத்தும், ஐந்தாவது மாதத்தில் நீலத்தாமரை, க்ஷீரகாகோலி இரண்டையும் அரைத்தும், ஆருவது மாதத்தில நீலத்தாமரைக் கிழங்கு, திராட்சை, சிறு நாகப்பூ, சாரப்பருப்பு இவைகளை அரைத்தும், ஏழாவது மாதத்தில் மூங்கிலரிசி, சர்க்கரை, நெற்பொறி, விலாம் பழம், விலாம்வேர் இவைகளை அரைத்தும், எட்டாவது மாதத்தில்

திராக்ஷை, பதிமுகம், கொத்துமல்லி விதை, அல்லிக்கிழங்கு இவைகளை அரைத்தும், அல்லது யானைத்திப்பிலியைக் கஷாயமிட்டுப் பாலுடனும், ஒன்பதாவது மாதத்தில் காகோலீ, சிற்றாமணக்கு வேர், புரசம்விதை இவைகளை அரைத்து வெல்லம் சேர்த்து, மோதகமாக்கி சாப்பாட்டிற்குப் பின்னும் பத்தாவது மாதத்தில் குங்குமப்பூ, அல்லிக்கிழங்கு, அதிமதுரம் சர்க்கரை இவைகளை அரிசி கழுநீரில் அரைத்து பால் சேர்த்தும் சாப்பிட, கருவிடத்தில் ஏற்படும் வலியும், மற்ற வேதனையும் குறைந்து, கரு நன்றாக வளரும்.

5 கர்ப்பிணிக்கு ஜ்வரம் வந்தால் இலுப்பைப்பூ சந்தனம், விலாமிச்சைவேர், நன்னாரி, அதிமதுரம், பதிமுகம் இவைகளின் கஷாயம் தேன், சர்க்கரை சேர்த்தும் அல்லது கொத்துமல்லி விதை, சீந்திற்கொடி, நெல்லி முள்ளி கஷாயமும் விஷமஜ்வா மேற்பட்டால் சுக்கு ஆட்டுப்பாலில் அரைத்துச் சாப்பிட நல்லது.

6 சிறுவாகை இலை, சிற்றாமணக்கு இலை, ஏழிலம்பாலைப் பட்டை இவைகளைப் போட்டு கொதிக்க வைத்த ஜலத்தில் ஸ்னானம் செய்ய ஜ்வரம் நீங்கும். அதிமதுரம், திராக்ஷை, தேவதாரு, சுக்கு இவைகளை ஆட்டுப்பாலில் விட்டரைத்துத் தடவ தலைவலி நீங்கும்,

7. சந்தனம், விளாமிச்சைவேர், கோஷ்டம், தாமரைக் கிழங்கு, நன்னாரி, அல்லிக்கிழங்கு, பூலாங்கிழங்கு (கச்சோரம்) நெல்லிமுள்ளி இவைகளை அரைத்துப்போட தலைவலி நீங்கும். சிற்றாமுட்டியை கஷாயமாகவும், கல்கமாகவும் சேர்த்து பாலுடன் காய்ச்சிய தைலம் எல்லாவாதவிகாரங்களையும் ஸந்தத ஜ்வரத்தையும் போக்கும், கோரைக்கிழங்கு, சீந்திற்கொடி, நிலவேம்பு, வேப்பம்பட்டை, சந்தனம், இவைகளைக் கல்கமாகவும், ஏழிலம் பாலைப்பட்டையைக் கஷாயமாகவும் சேர்த்துக் காய்ச்சிய தைலம் ஜ்வரத்தைப்போக்கும்.

8. சண்டைக்கிழங்கு, கடுக்காய் இவைகளின் சூர்ணத்தைத் தேனுடன் சாப்பிட்டாலும், கடுக்காய்த்தோலைத் தூளாக்கித் தேனுடன் சாப்பிட்டாலும், கடுக்காய், மிளகு, சுக்கு இவைகளை எண்ணெய் விட்டு வறுத்து தூளாக்கி வெல்லத்துடன் சாப்பிட்டாலும் காஸம் நீங்கும். நொச்சி இலைச்சாற்றில் சம்பா அரிசியை அரைத்து நெய்யப்பமாக்கிச் சாப்பிட காஸம் நீங்கும் கோரைக் கிழங்கு, கடுக்காய், சுக்கு இவைகளின் சூர்ணத்தை வெல்லத் துடன் சேர்த்து வாயில் அடக்கிக்கொள்ளச் சுவாஸமும் காஸமும்

நீங்கும். மஞ்சள், திப்பிலி, சுக்கு, மிளகு இவைகளின் சூர்ணத்தை நல்லெண்ணெயும் வெல்லமும் சேர்த்துச் சாப்பிட காஸமும், ச்வாஸமும் நீங்கும்.

9. சீந்திற்கொடி, கண்டந்திப்பிலி, அதிமதுரம் இவைகளின் சூர்ணத்தை பசுஞ்சாணநீர், பசுவின் நெய், தேன் சேர்த்துச் சாப்பிட ச்வாஸம் நீங்கும் பூங்காவி, மிளகு, சுக்கு, ஏலம் இவைகளின் சூர்ணம், நெய், தேன் சேர்த்து சாப்பிட ச்வாஸம் நீங்கும்.

10. ஆலம் விழுது, அத்திக்குருத்து இவைகளின் சாற்றில் திப்பிலிப்பொடியும் தேனும் சேர்த்தும்; திப்பிலி, சிறுநாகப்பூ, மாம்பருப்பு நெற்பொரி இவைகளின் சூர்ணத்தில் தேன் சேர்த்தும் ; அமுக்கராக்கிழங்கு, திப்பிலி, சர்க்கரை நெற்பொரி இவைகளைத் தேன் சேர்த்தும் ; அதிமதுரம், அல்லிக்கிழங்கு இவைகளின் சூர்ணத்தை தேன் சேர்த்துச் சாப்பிட வாந்தி நிற்கும்.

11. ஆலம் விழுதின்சாறு, அதிமதுரத்தூள் நெற்பொரித்தூள் இவைகளைத் தேன் சேர்த்துச் சாப்பிட விக்கலும் வாந்தியும் நிற்கும். துருஞ்சிப்பழச்சாற்றில் நெற்பொரி இந்துப்பு சேர்த்து நெய் காய்ச்சிச் சாப்பிட உடன் விக்கல், வாந்தி நிற்கும். சுக்கை வெல்லத்துடனும் அதிமதுரத்தைத் தேனுடனும் திப்பிலியைச் சர்க்கரையுடனும் நஸ்யமிட விக்கல் நிற்கும். சிறுநாகப்பூ கற்கண்டு அல்லிக்கிழங்கு இவைகளின் சூர்ணத்தைத் தேனுடனும் சர்க்கரை, திப்பிலி, நெற்பொரி இவைகளின் சூர்ணத்தைத் தேன், நெய் சேர்த்தும் சாப்பிட விக்கல் நீங்கும்.

12. சிற்ருமுட்டி வேர், அதன்காய் இவைகளின் கஷாயத்தில் பாலோ, திப்பிலித்தூளோ சேர்த்தும் முள்குறிஞ்சி வேர், கஷாயத்தையும் கொடுக்க வாத பித்த கப சூலங்கள் நீங்கும். நன்கு தயாரான மத்யத்தை பால் நெய்யுடன் சாப்பிட கர்ப்பிணியின் யோனிசூலம் நீங்கும். பசும்பாலுடன், இளநீரையும், வில்வப் பழச்சாறையும் சாப்பிட யோனிசூலம் நீங்கும். முள்ளி, சிற்ருமுட்டி, வில்வவேர், சுக்கு இவைகளின் கஷாயத்துடன் பால் சேர்த்துச் சாப்பிட ஹ்ருதய சூலம் நீங்கும். துரிஞ்சிப்பழச் சாறும் மோரும் திப்பிலித்தூளும் இந்துப்பும் சேர்த்துச் சாப்பிட ஹிருதய சூலம் நீங்கும். பெருங்காயம், இந்துப்பு. திப்பிலி, கடுக்காய் இவைகளின் சூர்ணம் வென்னீருடன் சாப்பிட எல்லாவித வலிகளும், பிடிப்பும் நீங்கும்.

14. மாம்பருப்பு, காட்டாத்திப்பூ, லோத்திரப்பட்டை, இவைகளை அரிசி கழுநீருடன் சாப்பிட தீவிர அதிஸாரம் நீங்கும். அவ்விதமே மஞ்சிட்டி (தொட்டாவாடி) காட்டாத்திப்பூ, லோத்திரப்பட்டை, சுக்கு, இவைகளின் சூர்ணமும், வட்டத்திருப்பி, மஞ்சிட்டி (தொட்டாவாடி) லோத்திரப்பட்டை கோரைக்கிழங்கு, காட்டாத்திப்பூ இவைகளின் சூர்ணமும் அரிசி கழுநீருடன் சாப்பிட நல்லது.

15. ரத்த கிரஹணியில் கோரைக்கிழங்கு, வட்டத்திருப்பி, மஞ்சிட்டி அல்லது பெரும்புங்கின் சாறும் நல்லது. நாவல் கொழுந்து. இத்திகொழுந்து, ஆலம் கொழுந்து, அரசங் கொழுந்து இவைகளைத் தயிர்விட்டரைத்து, தேன் கலந்து சாப்பிடலாம் வட்டத்திருப்பி காட்டாத்திப்பூ, சுக்கு தாமரை கேசரம், ஓமம் இவைகளைச் சேர்த்து கஞ்சி தயாரித்து, மோருடன் சாப்பிட நல்லது நாகப்பட்டையை அரைத்து சுக்கு, திப்பிலி, மிளகு, இந்துப்பு, ஓமம் இவைகளின் பொடி சேர்த்து மோருடன் சாப்பிடலாம். வில்வப்பழத்தையும், சிறுகீரை வேரையும் பாலுடன் அரைத்து, சர்க்கரை தேன் சேர்த்துச் சாப்பிட நல்லது வட்டத்திருப்பி, சுக்கு, நிலவேம்பு, தேவதாரு, கோரைக்கிழங்கு இவைகளின் கஷாயம் அதிஸாரத்தையும் ஜ்வரத்தையும் போக்கும்.

16. கர்ப்பஸ்ராவத்தில் : அதிமதுரம், நீலத்தாமரைக்கிழங்கு இவைகளைப் பாலில் அரைத்து நெய்யும் தேனும் சேர்த்து சாப்பிட நல்லது. காட்டாத்திப்பூ, லோத்திரப்பட்டை, நீலோத்பலக்கிழங்கு, அல்லிக்கிழங்கு, இவைகளைப் பாலில் அரைத்துச் சாப்பிடலாம். மருள்கிழங்கும் நன்னாரியும் சேர்த்து அரைத்துப் பாலுடன் சாப்பிட கர்ப்பஸ்ராவம் நிற்கும் பேய்ப்புடல், ஓமம், உள்ளிப்பூண்டு, பெருஞ்ஜீரகம், உச்சித்திலகம், காலை மாலை சாப்பிட ரத்தஸ்ராவம் நிற்கும். கர்ப்பிணி சுகம் அடைவாள். நெல்லிப்பட்டையை அரைத்து மூங்கிலின் சாம்பலுடன் சேர்த்து எருமைத் தயிரில் குழப்பிச் சாப்பிட ரக்தாதிஸாரம் நிற்கும். முஞ்ச்ப்பில்லின் ஸ்வரஸத்தை தேனுடனும் பாலுடனும் சாப்பிடலாம் செம்பரத்தையின் கிஞ்சல்க்கத்தை (புஷ்பத்தின் நடுவில் உள்ள தொங்கட்டானை) பாலுடனும் தேனுடனும் அரைத்துக் கலக்கிச் சாப்பிடலாம்.

17. ரக்தப்பிரதரம் நிற்க : சிறுகீரையின் வேரை அரிசி கழுநீருடன் அரைத்து தேனுடன் சேர்த்துச் சாப்பிடலாம். தென்னம் பூவின் சாரைப் பாலுடன் சாப்பிடுவதும், நாயுருவி வேரைப் பாலுடன் சாப்பிட ரக்தப்ரதரம், அஸ்திஸ்ராவம் நீங்கும். சீந்திற்கொடி, நெல்லிமுள்ளி, மூங்கிலுப்பு, சர்க்கரை இவை

களின் சூர்ணம் தேனுடனும் சாப்பிட ரக்த பிரதரத்தையும், அஸ்தி ஸ்ராவத்தையும் போக்கும். புல்லுருவி, ஆடாதோடை, நாயுருவி, பேய்ப்பருத்தி (உலட் கம்பல்) அத்திப்பட்டை, சிற்று முட்டி வேர் இவைகளின் கஷாயத்தை வெல்லத்துடன் சாப்பிட நல்லது. தாமரை மகரந்தத்தூள், சந்தனம், சிறுகீரை, அதி மதுரம், சீந்தில் சர்க்கரை, தண்ணீர்விட்டான் கிழங்கு, ஸ்வர்ண மாக்ஷிக பஸ்மம். இவைகளை சூர்ணமாக்கி தேன் சர்க்கரை சேர்த்துச் சாப்பிட ரக்த பிரதரம் நிற்கும்.

18. தாமரைத்தண்டு, லோத்ரப்பட்டை, திராக்ஷை, செஞ் சந்தனம், சுக்கு, இலுப்பைப்பூ, பெருவாகை வேர், சர்க்கரை, நன்னாரி இவைகளைக் கல்கமாகச் சேர்த்து நான்கு பங்கு பாலு டன் கரய்ச்சி நெய் கரஸம். ச்வாஸம், ஹ்ருதய ரோகம், காமலை நீர்சுருக்கு சூலம். பாண்டு, மலக்கட்டு இவைகளில் நல்லது.

19. சுகப்பிரஸவத்திற்காக முருங்கைச்சாறு சேர்த்து எண் ணெய் காய்ச்சி ஞாயிற்றுகிழமையில் எண்ணெய் தேய்த்துக் குளிக்க சுகப்பிரசவம் ஏற்படும். கலப்பைக் கிழங்கு அரைத்து தேன் சேர்த்துத் தொப்புளில் தடவலாம். கடம்பு உளுந்து, நொச்சி, இவைகளின் காய் பூ, வேர் இவைகளை சுத்த ஜலத் தில் அரைத்துச் சாப்பிட சுகப்பிரஸவம் ஏற்படும். பன்றியின் பல்லை ஜலத்தில் விட்டரைத்து கண்ணில் அஞ்சனமிட சுகப் பிரஸவமாகும். பாம்பின் சட்டையை கர்ப்பதுவாரத்தில் தூப மிடலாம் மாத்ருகாக்ஷரத்தை விலோம (தலைகீழாக) ரீதியில் எண்ணெயில் ஜபித்து தலை மார்பு, தொப்புள், யோனி இடங் களில் தடவ உடன் பிரசவிப்பாள்.

20. பிரஸவித்தவுடன். நால்பால் மரப்பட்டை கஷாயத்தை ஆறவைத்து குழந்தையை குளிப்பாட்டவும், குழந்தை நீண்ட நாள் வாழும். சுவர்ச்சல உப்பு, இந்துப்பு, வசம்பு, பிராம்மீ, இவைகளை சம அளவில் சேர்த்து நெய்யுடன் லேஹியமாக்கி நாக்கில் தடவ சிறந்த பேச்சாளனாவான். திப்பிலி, வசம்பு, தங்கம், தாமரைக்கிழங்கு, இவைகளை தேன் நெய் சேர்த்து தடவ லாம். முதல் இரண்டையும், பின் இரண்டையும் தனித்தனி யாகவும் தடவலாம். மேதை வளரும். இந்துப்பூ, சுவர்ச்சலை உப்பு, தாமரைக் கிழங்கு, திப்பிலீ, தங்கம் இவைகளை தேன் நெய் சேர்த்து குழைத்து நாக்கில் தடவ பலம் சாந்தி, ஞாபக சக்தி, அழகு மேதை வளரும். கடுகு இந்துப்பு, திப்பிலி, கோஷ்டம் வசம்பு, பிராம்மி, பூலாங்கிழங்கு, அல்லிக்கிழங்கு இவைகளைக் கல்கமாக்கி, பிரம்மி சாரில் நெய்தயாரித்துக் கொடுக்க பாலனுக்கு, மேதை, தைர்யம், அழகு, ஞாபகசக்தி, சாந்தி இவைகள் ஏற்படும்.

அனுபவ முறைகள்

க்ருமிகளில்

க்ருமிக்னவடியும் கஷாயமும்.

சுத்த ரஸம் ½ தோலா சுத்த கந்தகம், கோரைக் கிழங்கு, வறுத்த பூவரசம் விதை, வாய்விளங்கம், மேல் காய்ந்த பரணி நீக்கிய மாதுளம் விதை அல்லது பட்டை, கழற்சி வித்து ஓடு நீக்கி வறுத்தது, கமேலா, குரோசானி ஓமம், ஓம சத்து (தைமால்) பெருங்காயம் பொரித்தது இவை வகைக்கு ஒவ்வொரு தோலா இவைகளைத் தூள் செய்து அன்னுசி இலைச்சாறு விட்டரைத்து 48 யவ அளவில் மாத்திரை செய்து கொள்ளவும்.

கோரைக்கிழங்கு, முயல்காதிலை, புரசம் விதை, வாய்விடங்கம், மாதுளம் பட்டை, ஓமம், குரோசானி ஓமம், பாக்கு, தேவதாரு கல்யாண முருங்கை விதை, கடுக்காய் தோல், தானிக்காய் தோல், நெல்லிமுள்ளி, கருங்காலி வைரம், வேம்பின் உள்பட்டை, வாய் விடங்கம் இவைகளை ஸமபாகம் எடுத்து இடித்து வேளைக்கு ஒரு தோலா எடுத்து 6-8 அவுன்ஸ் ஜலத்திலிட்டு கஷாயமாக்கவும்.

வேளைக்கு 1–2 மாத்திரையும் கஷாயமும் சாப்பிட கிருமிகளும் அதனுல் ஏற்பட்ட உபத்திரவங்களும் நீங்கும், இதை 21 தினங்கள் தொடர்ந்து சாப்பிட வேண்டும்.

இருமி விரேசன வடி

ரஸம், கந்தகம், சுக்கு, பாக்கு பொரித்த வெங்காரம், எட்டி வித்து, ஸர்ஜ க்ஷாரம், மிளகு, திப்பிலி, வெண் செவதை, சுத்தி செய்த நேர்வாளம் இவைகளை சமனெடை எடுத்துக்கொள்ளவும். ரஸ கந்தகங்களைச் சேர்த்தரைத்த பின் மற்றவைகளையும் சேர்த்து 6 மணி நேரம் திரவம் சேர்க்காமலேயே அரைத்த பின் கருசலாங் கண்ணிச் சாற்றில் 24 மணி நேரம் அரைத்துப் பயறளவு மாத்திரை உருட்டவும்.

சிறுவர்களுக்கு 1–2 மாத்திரைகளும், பெரியவர்களுக்கு 2-4 மாத்திரைகளும் ஜலத்துடன் கொடுக்க கிருமிகள் வெளியாகி. நன்கு மலசுத்தி ஆகும். அதிகமாக பேதியானுல் எலுமிச்சம்பழம் சர்பத்து சாப்பிடவும்.

———

இம்ப்காப்ஸ்

பூரண இயந்திர சாதன வசதியோடு சுத்தமான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளை தயாரிக்கிறது

இந்திய மருத்துவ முறையின்படி வைத்தியம் செய்யும் மருத்துவர்கள் 1944-ம் ஆண்டிலேயே முதன்முதலாகக் கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படையில் ஒரு மருந்து சாலையை நிறுவினர். சுத்தமான மருந்துகளை தயாரித்து ஆயுர்வேத, சித்த, யுனானி மருத்துவ முறைக்குச் சேவை செய்வதுடன், நம் நாட்டு மருந்து மூலிகைகளை ஆராய்ந்து, புராதன மருத்துவ வல்லுநர்கள் பின்பற்றிய முறையை ஒரு நிலைப்படுத்துவதே இதன் நோக்கம். இதில் நாங்கள் நம்பிக்கையோடு முன்னேறுகிறோம். இப்போது நவீன இயந்திர சாதன வசதிகளுடன் மருந்துகளை பக்குவமாகத் தயாரிப்பதில் பூரணத்துவம் பெற்று மக்களுக்குத் திறமையாக சேவை புரிகிறோம். இம்ப்காப்ஸ் தேசமக்களை ஆரோக்கியமாகவும் வலிவுள்ளவர்களாகவும் இருக்க துணை செய்கிறது.

IMPCOPS

தி இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.
லாட்டிஸ் பிரிட்ஜ் ரோடு, அடையாறு, சென்னை-20

பிரபலமான கெமிஸ்டுகள் மற்றும் டிரக்கிஸ்டுகளிடம் கிடைக்கும்

மற்ற அலுவலகங்கள்:
4/186, மௌண்ட்ரோடு, மதராஸ்-2 போன்: 86520
48, தெற்குமாசி வீதி, மதுரை P.O.
27, காசிவிஸ்வேஸ்வரன் கோயில் தெரு, சுல்தான்பேட்டை, பெங்களூர்-2 (மைசூர் ஸ்டேட்)



maa/IMP-/747/M-TA

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கை கண்ட பலனளிக்கும்

"சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக்கட்டிகளை

எங்நிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர். (S. Ry.)

Edited by Vaidya Vachaspati Pandit P. S. Rama Sarma, Published by Dr. T. S. Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2. Printed at Githa Press, Tiruchirapalli-2.